

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றிய – பேரூர் தி.மு.க. சார்பில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் என்றென்றும் கலைஞர் புகழைப் போற்றி பொதுக் கூட்டத்தில் தமிழ்நாடு நெடுஞ்சாலை துறை மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார். உடன் க.செல்வம் எம்.பி., ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், டி.குமார், இரா.நாகன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரி வள்ளல், பேரூராட்சி மன்ற தலைவர் பொன் சசிகுமார், உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### பா.ஜ.க.வை வீழ்த்துவதே இலக்கு:

# அடுத்த கூட்டம் சிம்லாவில் நடக்கும்!

## மல்லிகார்ஜுன கார்கே பேட்டி!

பாட்னா, ஜுன்.24-

எதிர்க்கட்சிகளின் அடுத்த ஆலோசனைக் கூட்டம் ஜுலை 10 அல்லது 12ம் தேதி சிம்லாவில் நடைபெறும் என காங். தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அறிவித்துள்ளார்.

வரும் லோக்சபா தேர்தலில் ஒன்றிய பாஜக அரசை வீழ்த்துவது தொடர்பாக 15 எதிர்கட்சிகளின் தலைவர்கள் ஆலோசனை கூட்டம் நேற்று பாட்னாவில் நடந்தது. இந்த கூட்டத்தில் ராகுல், முதல்வர் மு.க.ஸ்டாலின், மம்தா பானர்ஜி, நிதிஷ்குமார் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றனர். கூட்டத்தில் ஒன்றிணைந்து பாஜகவை வீழ்த்த புதிய வியூகம் வகுக்கப்பட்டது.

கூட்டத்துக்கு பின் செந்தியாளர்களை சந்தித்து பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே;

கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை உள்ள கட்சிகளின் தலைவர்கள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர். 2024 லோக்சபா தேர்தலில் எதிர்க்கட்சிகளின் ஒற்றுமைக்கான பாதையை வகுப்பதே இந்த கூட்டத்தின் முக்கிய நோக்கமாகும். நாடாளுமன்ற தேர்தலுக்கு பொதுவான செயல்திட்டத்தை வகுத்து வருகிறோம். நாடாளுமன்ற தேர்தலையொட்டி பொது தேர்தல் அறிக்கையை தயார் செய்வது குறித்து ஆலோசித்தோம்.



அடுத்த ஆலோசனை கூட்டத்தில் பொதுத் தேர்தல் அறிக்கை குறித்து முடிவெடுப்போம். நாடாளுமன்ற தேர்தலை எதிர்க்கட்சிகள் இணைந்து சந்திப்பது தொடர்பான பொதுக் கருத்து அடுத்த மாதம் இறுதி செய்யப்படும். எதிர்க்கட்சிகளின் அடுத்த ஆலோசனை கூட்டம் ஜுலை 10 அல்லது 12ம் தேதி சிம்லாவில் நடைபெறும். பாஜகவை தோற்கடிக்க வேண்டும் என்பதே எங்களின் ஒட்டுமொத்த இலக்கு இவ்வாறு கூறினார்.

### திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

# 211 கிலோ சுத்த தங்கக் கட்டிகள் தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு!

## எஸ்.பி.ஐ. வங்கியில் அமைச்சர்கள் அனிதா இராதாகிருஷ்ணன் - பி.கே.சேகர்பாபு ஒப்படைப்பு!

திருச்செந்தூர், ஜுன் 24-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வரப்பெற்ற பலமாற்று பொன் இனங்களில் திருக்கோயிலுக்கு பயன்படாத பொன் இனங்களை உருக்கி, சுத்த தங்கக் கட்டிகளாக மாற்றி தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்திடும் வகையில் 211 கிலோ எடையுள்ள பிரித்தெடுக்கப்பட்ட பலமாற்று பொன் இனங்களை மாண்பமை உயர்நீதி மன்ற நீதியரசர் (ஓய்வு) செல்வி ஆர். மாலா அவர்கள் முன்னிலையில் நேற்று (23.06.2023) மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் பாரத ஸ்டேட் வங்கியின் பொது மேலாளர் கோவிந்த் நாராயண் கோயல் அவர்களிடம் ஒப்படைத்தனர்.

**திருக்கோயில்களுக்கு வருவாய் ஈட்டும் முதலீடு!**

2021-2022-ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில், ”கடந்த பத்து ஆண்டுகளாக திருக்கோயில்களில் காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்று பொன் இனங்களில், திருக்கோயிலுக்கு தேவைப்படும் இனங்கள் நீங்கலாக, ஏனைய இனங்களை மும்பையில் உள்ள ஒன்றிய அரசுக்கு சொந்தமான தங்க உருக்காலையில் உருக்கி, சொக்கத் தங்கமாக மாற்றி, திருக்கோயிலுக்கு வருவாய் ஈட்டும் வகையில் வங்கிகளில் முதலீடு செய்து, அதிலிருந்து வரும் வட்டி மூலமாக திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், இப்பணிகளைக் கண்காணிப்பதற்கு மூன்று மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஓய்வு பெற்ற மாண்பமை நீதியரசர்கள் தலைமையிலான குழுக்கள் மூலம் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்” என்று அறிவிக்கப்பட்டது.

இவ்வறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, திருக்கோயில்களில் பயன்பாட்டில் இல்லாத பலமாற்றுப் பொன் இனங்கள் பிரித்தெடுத்து உருக்கி சுத்த தங்கக்கட்டிகளாக மாற்றி முதலீடு செய்திடும் வகையில் சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் துரைசாமி ராஜு மற்றும் ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதியரசர்கள் க. ரவிச்சந்திர பாபு, செல்வி ஆர்.மாலா ஆகியோர் தலைமையில் தனிக்குழுக்கள் அமைக்கப்பட்டன. இதற்கான பூர்வாங்கப் பணிகளை கடந்த 13.10.2021 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.

அதன்படி, திருக்கோயில்களுக்கு பக்தர்களால் உண்டியலிலும், காணிக்கையாகவும் செலுத்தப்பட்ட பல மாற்றுப் பொன் இனங்கள் உருக்கி சுத்த தங்கமாக மாற்றப்பட்டு பாரத ஸ்டேட் வங்கியில் தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்யப்பட்டு, இதன் மூலம் கிடைக்கப் பெறும் வட்டித்தொகை அந்தந்த திருக்கோயில்களின் மேம்பாட்டிற்காக செலவிடப்பட்டு வருகிறது. விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலின் 20.567 கிலோ எடையுள்ள தங்கத்தின் மூலம் ஆண்டொன்றிற்கு ரூ.24.09 இலட்சமும், திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம், அருள்மிகு பவானியம்மன் திருக்கோயிலின் 91.061 கிலோ எடையுள்ள தங்கத்தின் மூலம் ரூ.1.04 கோடியும், திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலின் 42.990 கிலோ எடையுள்ள தங்கத்தின் மூலம் ரூ.39.13 இலட்சமும் மற்றும் மாங்காடு, அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயிலின் 39.704 கிலோ எடையுள்ள தங்கத்தின் மூலம் ரூ.39.29 இலட்சமும் வட்டியாக கிடைக்கப் பெறுகின்றன.

அதனைத் தொடர்ந்து, திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு பக்தர்களால் காணிக்கையாக செலுத்தப்பட்ட பலமாற்று பொன் இனங்களிலிருந்து கற்கள், அழுக்கு, அரக்கு மற்றும் இதர உலோகங்களை நீக்கி, நிகர பொன்னினங்களை கணக்கிடும் பணியானது ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் செல்வி ஆர்.மாலா முன்னிலையில் நடைபெற்றது. அதன்படி திருக்கோயிலுக்கு பயன்படுத்த இயலாத நிலையில் கிடைக்கப்பெற்ற பலமாற்று பொன் இனங்கள் மொத்த எடை 211 கிலோ கிராமினை உருக்கி, சுத்தத் தங்கமாக மாற்றி தங்க முதலீட்டு பத்திரத்தில் முதலீடு செய்யும் வகையில் நேற்று (23.06.2023) மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் பாரத ஸ்டேட் வங்கியிடம் ஒப்படைக்கும் வகையில் அதன் பொது மேலாளர் கோவிந்த் நாராயண் கோயல் அவர்களிடம் ஒப்படைத்தனர். இவை மும்பையில் உள்ள ஒன்றிய அரசுக்கு சொந்தமான தங்க உருக்காலையில் உருக்கி சுத்தத் தங்க கட்டிகளாக பெற்று அதனை பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்யப்படும். அதன் மூலம் கிடைக்கப் பெறும் வருவாய் திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்படும்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் இரா. அருள்முருகன் மற்றும் உறுப்பினர்கள், இணை ஆணையர்கள் ஆர்.செந்தில் வேலவன், எம்.கார்த்திக், பாரத ஸ்டேட் வங்கி துணைப் பொது மேலாளர் எம்.ஆனந்த், மண்டல மேலாளர் ஆர். செந்தில்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


தமிழ்நாடு அரசு
**தொழில்நுட்பக் கல்வித்துறை**
தொழில்நுட்பக் கல்வி வட்டம், சென்னை – 600025

மின்னணு ஒப்பந்தப்புள்ளி (மறு அழைப்பு) எண்: 5த.பொ/வ.அ.3/தொநுகவ/2023 – 24 நாள்: 23.06.2023
ஒப்பந்தப்புள்ளிப் படிவம்: மொத்த தொகை / ஒரு உறை முறை

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும், மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் தலைமைப் பொறியாளர், பொபது, தொழில்நுட்பக் கல்வி வட்டம், சென்னை - 600025 அவர்களால் பதிவுபெற்ற தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மின்னணு முறையில் கீழ்க்கண்ட பணிகளுக்குக் கோரப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | தோராய மதிப்பீடு (சரக்கு மற்றும் சேவை வரியுடன்) ரூபாய் இலட்சத்தில் | முன்வைப்புத் தொகை ரூபாய் மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம் | தகுதியான ஒப்பந்ததாரர் | முன் வைப்புத் தொகை செலுத்தும் முறை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 5 |
| 1 | செங்கல்பட்டு மாவட்டம், பெரும்பாக்கம் அரசு கலைக் கல்லூரியில் அரங்கம் கட்டும் பணி (under MPLAD fund) மூன்றாம் அழைப்பு | 177.00 | 98,500 /- 6 மாதங்கள் | வகுப்பு 4 மற்றும் அதற்கு மேல் | மின்னணு முறையில் |

1. ஒப்பந்தப்புள்ளிப் படிவங்கள், மின்னணு வழியாக ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் அறிவுறுத்தல்கள் குறித்து https://tntenders.gov.in இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிப் படிவங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்: 07.07.2023 காலை 11.30 மணி வரை (மின்னணு முறை)
3. மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: 10.07.2023 காலை 11.00 மணி அளவில்
4. மின்னணு ஒப்பந்தத்தில் கலந்துகொள்ள மின்னணு கையொப்பம் கட்டாயமாகும். ஒப்பந்தப்புள்ளி விவரங்களில் ஏற்படும் மாற்றங்கள் - திருத்தம் மேற்காணும் இணையதளத்தில் மட்டும் வெளியிடப்படும்.

செ.ம.தொ.இ/3227/ஒப்பந்தப்புள்ளி/2023

தலைமைப் பொறியாளர், பொபது, சார்பில்
தொழில்நுட்பக் கல்வி வட்டம், சென்னை – 600025

“சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்.”



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பொது சுகாதாரத்துறை - கால்நடை மருத்துவப்பிரிவு**

பொ.சு.கா.ம.பி.ந.க.எண்.அ2/0402/2023

**e-மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கீழ்க்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி மாநகர நல அலுவலர் பொதுசுகாதாரத்துறை அவர்களால் கோரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை, கால்நடை மருத்துவப்பிரிவின் கீழ் இயங்கும் புதுப்பேட்டை மற்றும் பெரம்பூர் மாட்டுத்தொழுவங்களுக்கு தேவைப்படும் 292 M.T. வைக்கோல் மற்றும் 88 M.T. அடர்மாட்டு தீவனங்களை ஒப்பந்த அடிப்படையில் அளிக்க கோருதல்.

| பணியின் மதிப்பு தொகை ரூ.63,55,200/- | ஒப்ப முன்வைப்புத் தொகை ரூ.63,552/- |
|---|---|

ஒப்ப நாள் மற்றும் நேரம் : 12.07.2023 அன்று மாலை 3.00 மணி வரை
ஒப்பம் திறக்கப்படும் நாள் : 13.07.2023 அன்று மாலை 3.30 மணி வரை
மேலும் விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 3228 / ஒப்பந்தப்புள்ளி / 2023

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

**மாநகர நல அலுவலர்**


### பாலசாகித்ய புரஸ்கார் – யுவசாகித்ய புரஸ்கார்

# விருது பெற்ற உதயசங்கர் - ராம் தங்கத்திற்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மனதாரப் பாராட்டு!

சென்னை, ஜுன் 24-

பாலசாகித்ய புரஸ்கார் விருது பெற்றுள்ள எழுத்தாளர் உதயசங்கர், யவுசாகித்ய புரஸ்கார் விருது பெற்றுள்ள ராம் தங்கம் ஆகியோருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மனதாரப் பாராட்டு தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :-

நம் வரலாற்றின் வேர்களை இளையோர் அறிய, கீழடியைத் தன் கதைக்களமாய்க் கொண்டு ஆதனின் பொம்மையை உருவாக்கி, அதற்கு அங்கீகாரமாக பாலசாகித்ய புரஸ்கார் பெற்றுள்ள எழுத்தாளர் உதயசங்கர் அவர்களுக்கும்; இளமையில் பசி எனும் வலியை நாஞ்சில் நாட்டு மொழியில் மிக அழுத்தமான விவரிப்புகளால் பதிவு செய்த திருக்கார்த்தியல் சிறுகதைத் தொகுப்புக்காக யுவசாகித்ய புரஸ்கார் பெற்றுள்ள ராம் தங்கம் அவர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையில் எனது மனமார்ந்த பாராட்டுகள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்சமூகவலைதளப்பதிவில்குறிப்பிட்டுள்ளார்.

# நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றாகப் போட்டியிட முடிவு செய்துள்ளோம்!

## பீகார் முதல்வர் நிதிஷ்குமார் பேட்டி!

பாட்னா, ஜுன்.24-

பீகார் முதல்வர் நிதிஷ்குமார் நாடு முழுவதும் பயணித்து எதிர்க்கட்சி தலைவர்களை சந்தித்துப் பேசினார்.

பீகார் முதல் மந்திரியும், ஐக்கிய ஜனதா தளம் கட்சித் தலைவருமான நிதிஷ்குமார் எதிர்க்கட்சிகளை ஓரணியில் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து எதிர்க்கட்சி தலைவர்களை சந்தித்துப் பேசினார்.

இதற்கிடையே, பீகார் மாநில தலைநகர் பாட்னாவில் நேற்று எதிர்க்கட்சி தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, தி.மு.க. சார்பில் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தேசியவாத காங்கிரஸ் கட்சி தலைவர் சரத் பவார், சமாஜ்வாதி கட்சி தலைவர் அகிலேஷ் யாதவ், டெல்லி முதல் மந்திரி அரவிந்த் கெஜிரிவால், ஜார்க்கண்ட் முதல் மந்திரி ஹேமந்த் சோரன், மேற்கு வங்காள முதல் மந்திரி மம்தா பேனர்ஜி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் டி.ராஜா, சிவசேனா சார்பில் உத்தவ் தாக்கரே உள்ளிட்ட தலைவர்கள் என 16 எதிர்க்கட்சி தலைவர்கள் உள்பட 6 மாநில முதல் மந்திரிகள் பங்கேற்றனர்.



இந்நிலையில், கூட்டம் முடிந்ததும் முதல் மந்திரி நிதிஷ் குமார் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில், இன்று நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டம் பயனுள்ளதாக அமைந்தது. வரும் பாராளுமன்ற தேர்தலை அனைவரும் ஒன்றாக இணைந்து சந்திக்க திட்டமிட்டு உள்ளோம். அது குறித்து கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. விரைவில் மற்றொரு கூட்டம் நடைபெறும் என தெரிவித்தார்.

### வரலாற்றை மாற்ற முயலும் பா.ஜ.க.வை முறியடிப்போம்:

# நாடாளுமன்றத் தேர்தலை ஒற்றுமையாக சந்திப்போம்!

## மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி பேட்டி!

பாட்னா, ஜுன்.24-

நாடாளுமன்றத் தேர்தலை ஒற்றுமையாக சந்திப்போம் என மம்தா பானர்ஜி உறுதி அளித்துள்ளார். வரும் லோக்சபா தேர்தலில் ஒன்றிய பாஜக அரசை வீழ்த்துவது தொடர்பாக பல்வேறு எதிர்கட்சிகளின் தலைவர்கள் ஆலோசனை கூட்டம் நேற்று பாட்னாவில் நடந்தது. இந்த கூட்டத்தில் ராகுல், முதல்வர் மு.க.ஸ்டாலின், மம்தா பானர்ஜி, நிதிஷ்குமார் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றனர். கூட்டத்தில் ஒன்றிணைந்து பாஜகவை வீழ்த்த புதிய வியூகம் வகுக்கப்பட்டது. கூட்டத்துக்கு பின் செந்தியாளர்களை சந்தித்து பேசிய முன்னாள் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி;

நேற்றை ஆலோசனை கூட்டத்தில் 17 கட்சிகள் பெற்றுள்ளது.

பாட்னாவில் தொடங்கி உள்ள இந்த முயற்சி மாபெரும் இயக்கமாக மாறும். மாநிலங்களிடம் இருந்து அனைத்து அதிகாரங்களும் பறிக்கப்பட்டுள்ளன. இந்திய வரலாற்றையே மாற்ற நினைக்கிறது பாஜக. பாஜக ஆட்சியை அகற்றும் ஒரே நோக்கத்தில் நாங்கள் ஒன்றிணைந்து போராடுவோம். விசாரணை அமைப்புகளை வைத்து எதிர்க்கட்சிகளை அச்சுறுத்துகிறது பாஜக. ஒருவேளை பா.ஜ.க. வெற்றி பெற்றால் இதுதான் இந்தியாவின் கடைசி பொதுத்தேர்தலாக இருக்கும். பா.ஜ.க. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க நாம் ஒன்றிணைந்து போராட வேண்டும். 2024 நாடாளுமன்றத் தேர்தலை ஒற்றுமையாக சந்திப்போம் இவ்வாறு கூறினார்.



### நடிகர் இராஜேஷ் - எழுத்தாளர் அஜயன் பாலா - கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி வாழ்த்துரை

# முனைவர் அ.ரஷித்கான் எழுதிய நூல்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிடுகிறார்!

சென்னை, ஜுன் 24-

சென்னை புதுக்கல்லூரி வரலாற்றுத்துறை மற்றும் நூர்ஜஹான் பதிப்பகம் சார்பில் வரலாற்றுத்துறை இணைப் பேராசிரியர் முனைவர் அ.ரஷித்கான் எழுதிய “சமூகம் சந்தித்த கொரோனா” பாகம் 1, 2, 3 ஆகிய நூல் வெளியீட்டு விழா, சென்னை இராயப்பேட்டை, புதுக்கல்லூரி ஆடிட்டோரியத்தில் 27.6.2023-செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு புதுக்கல்லூரி செயலர் ஜனாப் இலியாஸ் சேட் தலைமை வகிக்கிறார்.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நூலை வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்.

டாக்டர் எம்.ஜி.ஆர். திரைப்படக்கல்வித் தலைவர் நடிகர் இராஜேஷ், திரைப்பட இயக்குநர் அஜயன் பாலா, கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

புதுக்கல்லூரி முதல்வர் முனைவர் எம்.அஸ்ரார் ஷெரீப், வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் எம்.எஸ்.ஏ. ஜபருல்லா கான் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (23.06.2023) முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களைப் போற்றும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் ”எழுத்தாளர் கலைஞர் என்ற குழுவின் முதல் ஆலோசனைக் கூட்டம், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையிலும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில், குழு உறுப்பினர் செயலர் திருமதி.வே.அமுதவல்லி, குழு உறுப்பினர்கள் ஆர்.பூரணலிங்கம், (ஓய்வு), ஏ.எஸ். பன்னீர்செல்வன், கலாப்பிரியா, எஸ்.ராமகிருஷ்ணன், திருமாவேலன், இமையம், அறிவுமதி, வி.எம்.எஸ். சுபகுணராஜன், கவிஞர் சல்மா, தமிழ்மகன், பொதியவெற்பன் ஆகியோர் கலந்துகொண்டனர்.